# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை 14.11.2025 கதிர் 370





# யாழ்ப்பாணத்தில் நீரிழிவு தின நடைபவனி






யாழ்ப்பாணம், நவ. 14

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனி இன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக காலை 6.30 மணியளவில் இந்த நடை பவனி ஆரம்பமானது.

இந்த நடைபவனியில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்

7➤

# ஜனாதிபதி மீது இன்னும் நம்பிக்கையுடன் தமிழரசு

## வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்காமல் இருக்கத் தீர்மானம்

கொழும்பு, நவ. 14

வரவு – செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சித் தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் இன்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய அவர் ஜனாதிபதி மீது இன்னும் நம்பிக்கையுடன் இருப்பதாகக் கூறினார்.



போதைப்பொருள் சுற்றிவளைப்பு:

## இரு வாரங்களில் 16,738 பேர் கைது!



கொழும்பு, நவ. 14

நாடு முழுவதும் ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் வரை

7➤



## பஸ் தரிப்பிடத்தில் பெண்ணின் சடலம்!

கிளிநொச்சி, நவ. 14

ஏ – 9 பிரதான வீதியில் கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட ஆனையிறவு – தட்டுவன்கொட்டிப் பகுதியில் பெண் ஒருவரின் சடலம் பஸ் தரிப்பிடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

35 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## சுதந்திரபுரத்தில் புலிகளின் ஆயுதங்களைத் தேடி அகழ்வு!

முல்லைத்தீவு, நவ. 14

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியிலுள்ள தனியார் காணியில், யுத்த காலத்தில் விடுதலைப்புலிகள் மறைத்து வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்படும் ஆயுதங்களைத் தேடும் நோக்கில் இன்று காலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.ஹைச். மஹ்ரூஸ் நேரடி மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்றன.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், புதுக்குடியிருப்புப் பொலிஸார் இணைந்து அகழ்வு பணிகள்

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -




# உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம்

*2025 ஆம் ஆண்டு உலக நீரிழிவு தினத்தை (நவம்பர் 14) முன்னிட்டு, இலங்கை நீரிழிவு சம்மேளனம் நாளை (15) சமூக நலன்புரித் திட்டம் ஒன்றை செயற்படுத்தவுள்ளது.*

*இதன்படி, நாளை காலை 6.30 மணிக்கு நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு நடைபவனி கொழும்பு பொது நூலக வளாகத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.*

*அதனைத் தொடர்ந்து, காலை 7.30 மணி முதல் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் மருத்துவ முகாம் உள்ளிட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*இந்த அனைத்துச் செயல்பாடுகளும் இலவசமாக இடம்பெறவுள்ளதாக இலங்கை நீரிழிவு சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ஐ)*

# ஓய்வு பெறுகிறார் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

கொழும்பு, நவ.14 தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க (13) முதல் அமுலுக்கு வரும் வகையில் தனது பதவியிலிருந்தும் அரசு சேவையிலிருந்தும் ஓய்வு பெற்றார்.

ஒரு அறிக்கையை வெளியிட்டு, ரத்நாயக்க, 34 வருட அரச சேவைக்குப் பிறகு பதவி விலகுவதாக அறிவித்தார்.

அவர் ஒக்டோபர் 16, 2019 அன்று தேர்தல் ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார், அதன் பின்னர் அவரது பதவிக் காலத்தில் தேசிய மற்றும் உள்ளூர் தேர்தல்களை நடத்துவதில் முன்னணிப் பங்காற்றியுள்ளார்.

தனது கடமைகளை நிறைவேற்றுவதில் தனக்கு ஆதரவளித்த முன்னாள் மற்றும் தற்போதைய ஜனாதிபதி செயலாளர்கள், அரச நிறுவனங்களின் அதிகாரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் தனது நன்றியை ரத்நாயக்க தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஐ)

# “பல உயிர்களைப் பலி கொடுக்கும் முன்னர், ஆராய்க ”

*கொழும்பு, நவ.14*

*அத்தனகல்ல பிரதேச செயலகப் பிரிவின் வெலகெதர எனும் கிராமத்தில் ஹிமாயா செவ்வெந்தி என்ற இளம் பெண் இணையவழி கடன் மாபியாவில் சிக்கி, தன் உயிரை மாய்த்துக் கொண்டார் என அறியக்கிடைப்பதனால், இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வியாழக்கிழமை (13) அன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.*

*இது போன்ற இணையவழி கடன் வழங்கும் பல சட்டவிரோத நிறுவனங்கள் காணப்படுவதனால், இது தொடர்பாக ஒரு முறையானதொரு சட்டத்தை அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும், இந்த விவகாரத்தை ஆராய்ந்து பாரத்து, மேலும் பல உயிர்கள் பலியாகும் முன், இதனை இல்லாதொழிப்பதற்காக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளை முன்வைக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் கோரிக்கை விடுத்தார்*



# ஒரு இலட்சம் ரூபாவை தாண்டிய சாதாரண குடும்ப உணவுக் கட்டணம்! மொட்டு கட்சி எம்.பி சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ.14

நான்கு பேர் கொண்ட சாதாரண குடும்பமொன்றுக்கு உணவுக்காக மாத்திரம் மாதந்தம் 65,500 ரூபா செலவாகும் என்று மூன்று வருடங்களுக்கு முன்னரே மதிப்பிடப்பட்டிருந்தது. இப்போது அந்த தொகை ஒரு இலட்சம் ரூபாவை தாண்டியிருக்கலாம் எனஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் டீ.வி.சானக தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித வரியும் இல்லை என்று அரசாங்கத்தினால் கூறப்பட்டது. ஆனால் வாசிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 150 பில்லியன் ரூபா வட் வரி எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

18 வீதத்தில் இருந்து 20 வீதமாக வட் வரி அதிகரிப்பது மட்டுன்றி வரி செலுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும் போது அரசாங்கத்திற்கு கிடைக்கும் வரி இலாபமும் அதிகரிக்கும். மறைமுக வரிகளை குறைப்பதாக கூறிக்கொண்டு வரி அறவிடுவதையே செய்கின்றனர். அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் கூறப்பட்டது. இதன்படி 56,145 ரூபாவே சாதாரண ஊழியர் ஒருவருக்கு கிடைக்கும். ஆனால் சனத்தொகை மதிப்பீட்டு திணைக்களத்தில் வீட்டு மற்றும் வருமான செலவு கணக்கெடுப்பு மூன்று வருடங்களாக செய்யப்படவில்லை. இதனை செய்ய வேண்டும் என்று நாடாளுமன்ற ஆய்வுக்குழு கூறியுள்ள போதும் அது இதுவரையில் நடக்கவில்லை. என்றாலும் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி நபரொருவருக்கு தனது உடலுக்கு தேவையான களரியை பெற்றுக்கொள்வதற்கான உணவுக்காக 16,413 ரூபா மாதத்திற்கு செலவிட வேண்டும். அப்படியாயின் நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு 65,500 ரூபா மாதத்திற்கு உணவுக்காக மட்டும் செலவிட வேண்டும். இது இப்போது ஒரு இலட்சம் ரூபாவையும் கடந்திருக்கும்.

அதனால் சம்பந்தப்பட்ட நிறுவனம் இது தொடர்பில் சரியான கணக்கெடுப்பை நடத்த வேண்டும்

எனவே எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் விவசாயிகளின் பிரச்சினைகளையாவது தீர்க்குமாறு நாங்கள் அரசாங்கத்தை கேட்கின்றோம். இல்லையென்றால் அவர்கள் அன்றைய தினத்தில் நுகேகொட நகருக்கு வருவார்கள் என்றார் .(ஐ)

# நல்லூரில் மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கான பணி ஆரம்பம் - தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து முன்னெடுப்பு





தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து நல்லூரில் யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளன.

மாவீரர் வாரம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில் குறித்த காணியில் ஆரம்ப கட்டப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது யாழ். மாநகர மேயர், பிரதி மேயர், சபை உறுப்பினர்கள், முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர்.

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக உள்ள யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் கடந்த சில வருடங்களாக மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு காட்சிப்படுத்தலும், மாவீரர் நாள் நினைவேந்தலும் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், இந்த ஆண்டு அந்தப் பகுதியில் வழமையாக மாவீரர் நினைவேந்தல் பணிகளை முன்னெடுக்கும் தரப்புக்குப் போட்டியாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமக்கே குறித்த காணியை வழங்க வேண்டும் எனக் கோரி வந்தனர்.

ஒரு காணியை இரண்டு தரப்புக்கள் கோரியதால் அதை யாருக்கு வழங்குவது என்பதில் முடிவு எட்டப்படாத நிலை காணப்பட்டது.

இதையடுத்து யாழ். மாநகர சபையின் கடந்த அமர்வில் கருத்துத் தெரிவித்த மாநகர மேயர் மதிவதனி விவேகானந்தராஜா, இம்முறை அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் இணைத்து குறித்த காணியில் மாவீரர் நினைவேந்தலை முன்னெடுக்கப் போவதாக அறிவித்தார்.

இந்த யோசனையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) தவிர்ந்த யாழ். மாநகர சபையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் வரவேற்றனர். இதையடுத்தே குறித்த காணியில் மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கான பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாநகர மேயரும், பிரதி மேயரும் “மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் மரணித்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.” - என்று அழைப்பு விடுத்தனர்.

(ஐ)

# உயர்ந்த பதவியிலிருந்துக் கொண்டு தன்னிச்சையான முடிவுகளை நாம் எடுப்பதில்லை! ஜனாதிபதி

முன்னதாக பொது மக்களின் வரிப் பணம் எவ்வாறு அடிப்படைவாதத்திற்கு செலவிடப்பட்டது என்பது குறித்து புலனாய்வு அதிகாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலின் போது தனக்குத் தெரியவந்ததாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் கார்த்திகை வீரர்கள் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தினால் ஊகிக்கக்கூடிய பொருளாதாரம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். அரசாங்கத்தின் வருமானத்தை எதிர்பார்த்த மட்டத்தை விட அதிகரிக்க தற்போது முடிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுடன் ஒன்றிணைந்த தரப்படுத்தப்பட்ட அரசாங்கத்தை கட்டியெழுப்பியுள்ளது. ஆட்சியைகைப்பற்றியதன்பின்னர் நாட்டின்சட்ட விதிமுறைகளையும்தரப்படுத்தியுள்ளோம். அன்று ஆட்சியை கையகப்படுத்துவதற்காக போராடினோம் இன்று இந்த நாட்டிற்கு வெற்றியை பெற்று தருவதற்காக போராடி வருகிறோம்.

இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்த அரசாங்கத்துடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஒப்பிட்டு பேசுவதை ஒரு சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

எனினும் ஏனைய அரசாங்கத்தை போல நாம் ஒருபோதும் இல்லை. பழைய அரசாங்கம் ஒன்று ஆட்சிக்கு வருமாயின் அதை போன்றதொரு அரசாங்கத்துடன் நன்மை தீமைகளை ஒப்பிட்டு பேசலாம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுடன் ஒன்றிணைந்த தரப்படுத்தப்பட்ட அரசாங்கத்தை கட்டியெழுப்பியுள்ளது.

ஆட்சியை கைப்பற்றியதன் பின்னர் நாட்டின் சட்ட விதிமுறைகளையும் தரப்படுத்தியுள்ளோம். அன்று ஆட்சியை கையகப்படுத்துவதற்காக போராடினோம் இன்று இந்த நாட்டிற்கு வெற்றியை பெற்று தருவதற்காக கடுமையாக போராடி வருகிறோம்.

அப்போதைய நோக்கமும் தற்போதைய நோக்கமும் அபிலாசையும் மாத்திரமே மாறியுள்ளது. மக்களால் வழங்கப்பட்ட பெரும்பான்மை பலத்தைக் கொண்டு, அவர்களை நெருக்கடிக்குள்ளாகும் வகையில் ஆட்சி செய்யக் கூடாது என்ற பொறுப்புணர்வுடன் செயல்படுகிறோம். உயர்ந்த பதவியிலிருந்துக்கொண்டு தன்னிச்சையான முடிவுகளை நாம் எடுப்பதில்லை. அரசாங்கத்தின் உண்மையான பலம் பொதுமக்களே, இறுதி மூச்சுவரை நாட்டின் நிலையான மாற்றத்துக்காக சளைக்காமல் போராடுவோம்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவது சாத்தியமில்லை என கூறினார்கள். பின்னர் ஆட்சிக்கு வந்தாலும், ஆட்சியை கொண்டு நடத்த தரமான ஆட்சியர் இல்லை என வதந்திகளை பரப்பினார்கள். எனினும் தேசிய மக்கள் சக்தி மக்களின் ஆதரவுடன் ஒன்றிணைந்து வெற்றிகரமாக செயல்படுகிறது என்றார். (ஐ)

# டெல்லி கார் குண்டு வெடிப்பு சம்பவம்: உமர் நபியின் வீட்டை தரைமட்டமாக்கியது பாதுகாப்பு படை




டெல்லி கார் குண்டு வெடிப்பில் ஈடுபட்ட உமர் நபியின் வீட்டை பாதுகாப்பு படையினர் இடித்து தரை மட்டமாக்கினர். டெல்லியில் செங்கோட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகே, கடந்த 10ம் தேதி கார் வெடித்து சிதறியது. இதில், அருகில் இருந்த பல வாகனங்கள் தீப்பிடித்து 13 பேர் பலியாகினர். 27 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து தேசிய புலனாய்வு முகமை விசாரணை நடத்தி வருகிறது. இந்த சம்பவத்தை நிகழ்த்தியது டாக்டர் உமர் முகமது என்ற பயங்கரவாதி என சந்தேகிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் டி.என்.ஏ. பரிசோதனையில் அவர் தான் என உறுதி செய்யப்பட்டது.

இதற்கிடையே டெல்லியில் நடந்ததை போல கார் வெடிப்புச் சம்பவத்தை 4 இடங்களில் நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டு இருந்ததை போலீசார் கண்டறிந்து உள்ளனர். இதற்காக உமர் முகமது, முசமில் ஷகீல், ஷாகீத் ஷாகீன் மற்றும் அதீல் அகமது ராதர் ஆகியோர் ரூ.20 லட்சம் நிதி திரட்டி உள்ளதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்நிலையில், ஜம்மு – காஷ்மீரின் புல்வாமாவில் உமர் நபியில் சொந்த கிராமத்தில் உள்ள அவரது வீட்டைப் பாதுகாப்புப் படையினர் இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். இதற்கு முன்னதாக பஹல்காம் தாக்குதலுக்கு தொடர்புடையவர்களின் வீடுகளையும் பாதுகாப்புப் படையினர் இடித்துத் தரைமட்டமாக்கியது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ரயில் நிலையங்களில் 9000 குழந்தைகள் மீட்பு: ரயில்வேயின் மனிதநேயப் பணி!

கடந்த 2024ம் ஆண்டில் , ரயில் நிலையங்களில் மட்டும் 9,000 குழந்தைகள் மீட்கப்பட்டு உள்ளனர். பெற்றோரிடம் கோபம், பெருநகரத்தை சுற்றி பார்க்கும் ஆசை, வறுமை, சமூக பிரச்னை போன்ற காரணங்களால் காணாமல் போகும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்களை மீட்பதிலும், அவர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வதிலும், ரயில்வே பாதுகாப்பு படை முக்கிய பங்காற்றி வருகிறது.

இது தொடர்பாக வெளியான செய்தியில், "இந்திய ரயில்வே பாதுகாப்புப் படையினர் (சீகு) மற்றும் குழந்தைகள் நலக் குழுக்கள் இணைந்து மேற்கொண்ட சிறப்புப் பணிகளின் மூலம், நாட்டின் பல்வேறு ரயில் நிலையங்களிலிருந்து சுமார் 9,000 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளனர். காணாமல் போனவர்கள், குடும்பத்தைப் பிரிந்தவர்கள், கடத்தப்பட்டவர்கள், அல்லது ஆபத்தில் சிக்கியவர்கள் போன்ற குழந்தைகள் ரயில் நிலையங்களில் கண்டறியப்பட்டு, அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் உதவியை வழங்கி, அவர்களைக் குழந்தைப் பாதுகாப்பு மையங்களில் ஒப்படைக்கும் மகத்தான பணியை ரயில்வே தொடர்ந்து செய்து வருகிறது."இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பீகார் சட்டமன்றத் தேர்தல்: பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களில் என்டிஏ கூட்டணி முன்னிலை



பீகார் சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களில் என்டிஏ கூட்டணி முன்னிலையில் உள்ளது. 2 கட்டங்களாக நடந்த தேர்தலில் 67.13சூ வாக்குகள் பதிவாகியுள்ளன. இந்நிலையில் பீகார் சட்டப்பேரவையில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி காலை 8 மணி முதல் தொடக்கி நடைபெற்று வருகிறது. பீகார் முழுவதும் உள்ள 38 மாவட்டங்களில் மொத்தம் 46 வாக்கு எண்ணும்மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முதலில் தபால் ஓட்டுகள் எண்ணப்பட்டது. இதை தொடர்ந்து மின்னணு இயந்திர வாக்குகளும் எண்ணப்பட்டு வருகிறது.

இதில் தற்போதையை நிலவரப்படி பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களில் என்டிஏ கூட்டணி முன்னிலையில் உள்ளது. மொத்தமுள்ள 243 தொகுதிகளில் பெரும்பான்மைக்கு 122 இடங்கள் தேவை. ஆனால் ஜேடியூ¸ பாஜக கூட்டணி 129 இடங்களிலும், ஆர்ஜேடி¸ காங். கூட்டணி 93 இடங்களிலும் ஜன் சுராஜ் கட்சி 2 இடங்களிலும் முன்னிலையில் உள்ளது. தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. (ஐ)

## இந்திய ராணுவத்துக்கு ரூ.2,095 கோடியில் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் வாங்க ஒப்பந்தம் கையெழுத்து




இந்திய ராணுவத்துக்கு ரூ.2,095 கோடியில் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் வாங்க ஒப்பந்தம் கையெழுத்தானது. ஐ.என்.வி.ஏ.ஆர். பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் வாங்க பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்திய இராணுவத்தின் கவசப் படைப்பிரிவுகளின் முக்கிய அம்சமான டி-90 பீரங்கிகளின் சுடும் சக்தியையும், அழிவையும் அதிகரிக்கிறது. இந்த ஆயுத அமைப்பு, மிக அதிக தாக்கும் நிகழ்தகவு கொண்ட ஒரு அதிநவீன லேசர்-வழிகாட்டப்பட்ட பீரங்கி எதிர்ப்பு ஏவுகணையாகும்.

# பெண்கள் பாதுகாப்பு: சில கேள்விகள்?



பெண்களின் பாதுகாப்பின் மேல் அக்கறை கொண்டவர்களின் கருத்து என்பது, பெரும்பாலும் மூன்று விஷயங்களை சுற்றிதான் வருகிறது.

பெண்கள் எந்நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும், எப்பொழுதும் ஏதேனும் ஒரு ஆயுதத்தைப் பையில் வைத்திருக்க வேண்டும், தற்காப்புக் கலை தெரிந்து வைத்துக் கொள்வது இன்னும் நல்லது.

அதாவது பாலியல் சீண்டலில் ஈடுபடும் ஆண்கள் அப்படிதான் இருப்பார்கள், நீதான் உன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று பொறுப்பை மொத்தமாக பெண்களின் தலையில் ஏற்றி வைப்பது, பின்னர் ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் நீ ஏன் இதையெல்லாம் செய்யவில்லை என்று வகுப்பெடுக்கத் தொடங்குவார்கள். இவை எல்லாவற்றையும் பின்பற்றும் பெண்களும் கூட பாலியல் சீண்டல்களுக்கு ஆளாகிறார்கள். ஆனால் அப்போது சமூகம் வேறு விதமாக கேள்வி கேட்கும். அந்த நேரத்தில் உனக்கு அங்கே என்ன வேலை? அப்போது நீ என்ன உடை அணிந்திருந்தாய்? யாருடன் இருந்தாய்? என்ன செய்து கொண்டிருந்தாய்?

வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கும் பெண்களிடம்கூட பாலியல் வன்முறையில் ஈடுபடுபவர்களைப் பற்றிய செய்திகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. தூங்கும்போதுகூட பெண்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும், ஆனால் இத்தகைய வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எந்த அறிவுரையும் கிடையாது.

பாலியல் வன்முறையில் இருந்து தற்காத்துக் கொள்ள பெண்கள் எப்போதும் தங்கள் கைகளில் பெப்பர் ஸ்பிரே அல்லது சிறிய கத்தி வைத்திருக்க வேண்டும் என்பது பெரும்பாலானோரின் அறிவுரை. தன்னைப் பாதுகாத்துக் கொள்ள பெண்களை ஆயுதமேந்தச் சொல்பவர்கள் ஒரு விஷயத்தை யோசித்துப் பார்த்தார்களா? இங்கே ஆறு வயது பெண் குழந்தைகள்கூட பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்றனர். அந்த குழந்தை எந்த கத்தியை எடுத்து வீசும்? இன்னும் சொல்லப்போனால், இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் அந்தக் குழந்தைக்குத் தெரிந்தவர்களாகவோ, உறவுமுறையினராகவோதான் இருக்கின்றனர்.

கைப்பையில் சிறிய ரகக் கத்தியுடன் பொதுப் போக்குவரத்துகளில் பயணிக்கும் பெண்கள் பலர் இருக்கிறார்கள். அந்த சின்னஞ்சிறிய பேனாக் கத்தி இந்த ஒட்டுமொத்த ஆண்களின் மீது அந்தப் பெண் வைத்துள்ள நம்பிக்கையின்மையைக் காட்டுகிறது. அந்தக் கத்தியையும் மீறி அந்தப் பெண் மேல் ஒரு பாலியல் வன்முறை நிகழ்த்தப்படுமானால், அடுத்து அவள் வைத்திருக்க வேண்டியது அரிவாளா? அல்லது உரிமம் பெற்ற துப்பாக்கியா? இல்லை நேரடியாக ராக்கெட் லாஞ்சர்களுக்கு நகரலாமா? பூமியின் அற்புதமான ஆண் பெண் உறவை இப்படி வன்முறைக் களமாக்கி வெற்றி பெறப் போவது யார்?

கத்தியையோ பெப்பர் ஸ்பிரேயையோ தேடிச் செல்ல வேண்டிய அவசியம் பெண்களுக்கு இல்லை. ஒரே ஒரு பெண்ணைச் சுற்றி ஆயிரம் ஆண்கள் இருந்தால்கூட அவள் அங்கே கண்ணியத்துடன் நடத்தப்படுவாள் என்னும் நிலைக்கு ஆண்கள் எப்போது முன்னேறிச் செல்கிறார்களோ, அதுதான் இது அத்தனைக்கும் விடிவு காலம்.

தற்காப்புக் கலை பயில்வதின் மூலம் பெண்கள் தங்களை பாலியல் வன்முறையில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்று வாதிடுபவர்கள், இந்திய குத்துச் சண்டை சம்மேளனத்தின் தலைவரின்மீது சுமத்தப்பட்ட பாலியல் புகார்களுக்கு என்ன பதில் அளிப்பார்கள்? ஒரே ஒரு குத்தில் எதிராளியை வீழ்த்தும் வல்லமை படைத்தவர்கள் அல்லவா அவர்கள்? பின்னர் ஏன் வீதிக்கு வந்து போராடினார்கள்? பெண்ணை தன் அதிகாரத்தின் கீழ் பார்க்கும் ஆணாதிக்க எண்ணம் மாறாதவரை, எதுவும் இங்கே மாறப் போவதில்லை.

நண்பனையோ, உடன் பணிபுரிபவரையோ நம்பிச் செல்லும் இடங்களில், குளிர் பானங்களில் மயக்க மருந்து கொடுத்து நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறைகளில், அந்த தற்காப்புக் கலை எவ்விதம் கை கொடுக்கும்?

இதுவரை பெண்களின் மீது பாலியல் வன்முறை நிகழாத இடம் என்று ஒன்று இருக்கிறதா? வீடு, பணிபுரியும் இடம், வழிபாட்டு தலங்கள், பூங்காக்கள், பொதுப் போக்குவரத்து என்று எல்லா இடங்களிலும் பெண்கள் இதை எதிர்கொள்கின்றனர்.

கோயமுத்தூர் மற்றும் அண்ணா பல்கலை கல்லூரி மாணவிகளின் சம்பவத்தில், மிக முக்கியமாக சமூகத்தால் கேட்கப்பட்ட கேள்வி, அந்த இரவு நேரத்தில் அந்தப் பெண்ணுக்கு அங்கே என்ன வேலை? எந்த நேரத்தில் பெண்களின் மீது பாலியல் வன்முறை நிகழ்த்தப்படவில்லை என்று சொல்லுங்கள்? காலையில் பெண்கள் மிகவும் கண்ணியத்துடன் நடத்தப்படுகிறார்களா? அல்லது மாலை நேரங்களில் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதே இல்லையா?


பகல், இரவு, அருவி, கடற்கரை, மலைகள், காடுகள், என்று எல்லாமும் எல்லோருக்கும்தான் சொந்தம். யார் வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் எங்கு வேண்டுமானாலும் செல்லும் உரிமை உள்ளது. அடுத்தவர் உடல் மீது வன்முறை நிகழ்த்துவதற்குத்தான் யாருக்கும் உரிமை இல்லை.

உடல் ரீதியாக தன்னால் எட்டமுடியாத, வீழ்த்த முடியாத பெண்களை மனதளவில் சித்திரவதைக்கு உள்ளாக்கி, அவர்களை துன்புறுத்தி பார்ப்பதற்கும் ஆணாதிக்க மனப்பான்மையே காரணம். அதன் காரணமாகத்தான் ஒரு பெண் நடிகரின் உடல் எடை என்ன என்று ஒரு ஆண் நடிகரிடம் கேட்பது, எப்படி அவரை உங்களால் இலகுவாக தூக்க முடிந்தது என்று கேட்பது, நீ நடிகைதானே இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் நீ பதில் சொல்லியே ஆக வேண்டும் என்பது இவை எல்லாமே பாலியல் ரீதியான வன்முறைதான்.

நடிகையான தன்னை பாலியல் ரீதியில் பார்க்க வேண்டாம் என்று அவரே கேட்டுக் கொண்டபின்னும், மீண்டும் அதையே கேள்வியாக வைப்பது காலங்காலமாக ஊறிப்போன ஆணாதிக்க மனநிலை. இன்னும் சொல்லப் போனால், ஒரு நடிகையை பாலியல் ரீதியாகப் பார்க்கக் கூடாது என்பதே அவர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. அது எப்படி சாத்தியம் என்கிறார்கள்.

அத்தனை ஆண்கள் சுற்றி இருந்த அந்த அரங்கில் மிக தைரியமாக “நீங்கள் கேட்ட கேள்வி தவறு, நடிகையை, நடிப்பை பாலியல் ரீதியாக பார்க்காதீர்கள்” என்று ஆணாதிக்கம் மிகுந்த திரைத்துறையின் கன்னங்களில் பளாரென்று அறைந்து சொல்லி இருக்கிறார் கௌரி. தன்னைச் சுற்றி எத்தனை ஆண்கள் இருந்தாலும்கூட தனக்காக தான்தான் போராட வேண்டும் என்று கௌரி சொன்னது இங்குள்ள ஒவ்வொரு பெண்ணுக்காகவும்தான்.

போராடும் பெண்களுக்குத் தோள் கொடுப்பதும், துணை நிற்பதும் பால் பேதமின்றி அனைவரின் கடமை.



# தைவான் மீது சீனா தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுப்போம்: ஜப்பான் பிரதமர் எச்சரிக்கை



ஜப்பான் நாட்டின் முதல் பெண் பிரதமராக சனே தகைச்சி பதவியேற்றார். இந்நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்ப், ஆசிய நாடுகள் பயணத்தின்போது டோக்கியோவுக்கு வந்து சனே தகைச்சியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இரு நாடுகளிடையே ராணுவ, பொருளாதார உறவுகள் குறித்து பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. இந்நிலையில், டோக்கியோவில் நாடாளுமன்ற கூட்டத்தில் சனே தகைச்சி பேசுகையில், 'தைவான்மீது சீனா தாக்குதல் நடத்தினால் ராணுவம் மூலம் ஜப்பான் பதிலடி கொடுக்கும்' என்றார்.

இது இரு நாடுகளுக்கு இடையே பெரும் விவாத பொருள் ஆகியுள்ளது ஜப்பான் பிரதமரின் இந்த கருத்துக்கு மன்னிப்பு கோரி சீன அரசியல் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். அண்டை நாடான தைவானை தங்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக சீனா உறவு கொண்டாடி வருவதும், தைவான் மீது போர் விமானங்களை பறக்கவிட்டு அச்சுறுத்தி வரும் நிலையில் ஜப்பான் பிரதமரின் இந்த பேச்சு பதற்றத்தை அதிகரித்துள்ளது. (ஐ)

## ஷேக் ஹசீனாவுக்கு எதிரான வழக்கு நவ.,17ல் தண்டனையை அறிவிக்கிறது சர்வதேச குற்ற தீர்ப்பாயம்



மனித குலத்திற்கு எதிராக குற்றம் புரிந்ததாக வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிரான வழக்கில், வரும் நவ.,17ம் தேதி அந்நாட்டின் சர்வதேச குற்ற தீர்ப்பாயம் தண்டனையை அறிவிக்க உள்ளது.

கடந்தாண்டு வங்கதேசத்தில் ஏற்பட்ட மாணவர் போராட்டத்தில் பெரும் வன்முறை வெடித்தது. இதில், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்த வன்முறையை தொடர்ந்து பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்ந்தது. மேலும், அவர் வங்கதேசத்தை விட்டு வெளியேறி, இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்.

இதையடுத்து, நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில், வங்கதேசத்தில் இடைக்கால அரசு அமைந்தது. புதிய அரசு அமைந்த உடன் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக இனப்படுகொலை, ஊழல் செய்தது உட்பட ஏராளமான வழக்குகள் பதியப்பட்டுள்ளன. சமீபத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஷேக் ஹசீனாவுக்கு ஆறு மாத சிறை தண்டனை விதித்து, அந்நாட்டின் சர்வதேச குற்ற தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

கடந்த ஆகஸ்டில் அரசின் இடஒதுக்கீடு கொள்கைக்கு எதிராக போராடுவோரை சுட்டுக்கொல்ல ஹசீனா உத்தரவிட்ட ஆடியோ வெளியானது. இதை ஆதாரமாக வைத்து ஷேக் ஹசீனா, முன்னாள் உள்துறை அமைச்சர், முன்னாள் போலீஸ் ஐ.ஜி., ஆகியோர் மீது, மனித குலத்திற்கு எதிராக குற்றம் புரிந்ததாக புதிய வழக்கை தீர்ப்பாயம் பதிந்து விசாரணை நடத்தி வந்தது. இந்த வழக்கில் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்த நிலையில், ஷேக் ஹசீனாவுக்கான தண்டனையை வரும் நவ.,17ம் தேதி வெளியிட இருப்பதாக அந்நாட்டின் சர்வதேச குற்ற தீர்ப்பாயம் அறிவித்துள்ளது. இதனிடையே, வங்கதேச மக்களுக்கும் தேவையான நிபந்தனை. அது ஜனநாயகத்தில் பங்கெடுப்பது. தவிர, அவாமி லீக் கட்சி மீதான தடை விலக்கப்பட வேண்டும். நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். இதற்கெல்லாம் இடைக்கால அரசு ஒப்புக்கொண்டால் மட்டுமே, மீண்டும் தாய்நாடு திரும்புவது சாத்தியமாகும் என்று ஷேக் ஹசீனா நிபந்தனை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ஆப்கானில்தான் இந்த அவலம் 10ல் 9 குடும்பங்கள் பசியால் வாடுகிறது ஐ.நா

ஆப்கானிஸ்தானில் 10-ல் 9 குடும்பங்கள் பசியால் வாடுவதாக ஐ.நா. மேம்பாட்டு திட்ட அறிக்கை தெரிவிக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டு திட்ட அறிக்கையில், ஆப்கனின் பொருளாதார நிலை குறித்து சில தரவுகளை வெளியிட்டுள்ளது. அதில், சமீப காலமாக வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் ஈரானில் இருந்து ஆப்கானியர்கள் 23 லட்சம் பேர் நாடு திரும்பியுள்ளனர்.

அவர்களில் 1,500 குடும்பங்கள் உட்பட 49,000 குடும்பங்களில் நாடு தழுவிய அளவில் ஐநா மேம்பாட்டு திட்டத்தின் சார்பில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. வேலைவாய்ப்பு, வீட்டு வசதி, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி ஆப்கனிஸ்தான் மக்கள் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இந்நிலையில்தான், 23 லட்சம் பேர் ஆப்கனிஸ்தானுக்கு திரும்பியுள்ளனர். இதனால், பற்றாக்குறை இன்னும் அதிகரித்துள்ளது. சுகாதாரம், சுத்தமான குடிநீர், கல்வி ஆகியவை வெகுவாக சரிந்துள்ளன.

குறிப்பாக, கிராமப்புறங்களில் இன்னும் குறிப்பாக கிராமப்புற பெண்கள் மத்தியில் இவற்றுக்கான அணுகல் சாத்தியமற்றதாக உள்ளது. ஆப்கனிஸ்தானில் 10-ல் 9 குடும்பங்கள் உண்ணும் உணவின் அளவை குறைப்பது, சொத்துகளை விற்பது, கடன் வாங்குவது போன்ற எதிர்மறை நடவடிக்கைகளின் மூலம் சமாளிக்கின்றன. ஆப்கனிஸ்தானிலேயே தொடர்ந்து இருந்து வரும் குடும்பங்களில் 81 சதவீத குடும்பங்களும், வெளிநாட்டில் இருந்து திரும்பிய குடும்பங்களில் 88 சதவீத குடும்பங்களும் கடனால் தவித்து வருவதாக ஐநா உயர் அதிகாரி கன்னி வக்னராஜா தெரிவித்துள்ளார். (ஐ)

## சீனாவில் ரூ.50,000 கோடி மோசடி: லண்டனில் சிக்கிய 'கிரிப்டோ' ராணி



சீனாவில் 50,000 கோடி ரூபாய்க்கு மேல் ஏமாற்றிவிட்டு, ஐரோப்பிய நாடான பிரிட்டனில் தஞ்சம் புகுந்த மோசடி ராணி, விரைவில் தண்டனையை எதிர்கொள்ள இருக்கிறார்.

கடந்த 2021ம் ஆண்டு சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர், லண்டனில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொகுசு பங்களா ஒன்றை வாங்க முயன்றார். வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர், அவ்வளவு பெரிய தொகையை லண்டனில் முதலீடு செய்வது சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஆனால், அவர் அதற்கான உரிய விளக்கத்தை அளிக்கவில்லை. இதையடுத்து, லண்டனின் ஹாம்ப்ஸ்டெட் ஹீத் அருகே, மாதம் 18 லட்சம் ரூபாய் வாடகை கொடுத்து அவர் வசித்த ஆடம்பர மாளிகையில் போலீசார் சோதனை நடத்தினர். அங்கு விலையுயர்ந்த ஆடைகள், பொருட்கள், 60,000-க்கும் மேற்பட்ட பிட்காயின் தொடர்பான தகவல்கள் கொண்ட ஹார்ட் டிரைவ்கள் கண்டெடுக்கப்பட்டன. அந்த பிட்காயின்களின் மதிப்பு 50,000 கோடி ரூபாய்க்கும் மேலாகும். நீதிபதி முன்பு காலணி வீச முயற்சி: ரவுடியால் நீதிமன்றத்தில் பரபரப்பு மேலும், ஸ்வீடனில் கோட்டை வாங்க வேண்டும், லிபர்லாந்து ராணியாக வேண்டும் என்று எழுதி வைத்திருந்த டைரி ஒன்றையும் போலீசார் கைப்பற்றினர். யாடி ஷாங் என்ற பெயரில் இருந்த அந்தப் பெண்ணிடம் துருவி துருவி விசாரணை நடத்தியபோது, சீனாவைச் சேர்ந்த ஷ ிமின் கியான், 47, என்பது தெரியவந்தது. அவர் சீனாவில் இருந்து தப்பி லண்டனுக்கு வந்த தலைமறைவு குற்றவாளி என்பதையும் போலீசார் கண்டறிந்தனர். சீனாவில், 'லான்டியன் கெருய்' என்ற நிறுவனத்தை நடத்தி வந்த ஷிமின் கியான், முதியோர், ஓய்வூதியதாரர்களை குறிவைத்து கிரிப்டோ கரன்சி மோசடியை அரங்கேற்றியுள்ளார். 'படுத்துக் கொண்டிருக்கும்போதே பணக்காரர் ஆகுங்கள்' என்று ஆசையை துாண்டி ஒரு லட்சம் பேருக்கு மேல் முதலீடு செய்ய வைத்துள்ளார். கடந்த, 2017-ல் திட்டம் சரிய ஆரம்பித்ததும், சீன அதிகாரிகள் விசாரணை துவங்கினர். பின்னர் போலி பாஸ்போர்ட் மூலம் நாட்டை விட்டு தப்பியோடி, லண்டனில் தஞ்சம் புகுந்துள்ளார். கடந்த, 2023ல் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள ஷிமின் கியானுக்கு, இந்த வாரம் சவுத்வார்க் கிரவுன் நீதிமன்றம் தண்டனை வழங்க உள்ளது. (ஐ)

## இரு வாரங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப் பின்போது 16 ஆயிரத்து 738 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப்பில் நாடளாவிய ரீதியில் 16 ஆயிரத்து 915 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 110 கிலோ 556 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 600 கிலோ 947 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 10 கிராம் கொக்கேயின் போதைப்பொருளும், 458 கிலோ 216 கிராம் கஞ்சா போதைப்பொருளும், 10 இலட்சத்து 15 ஆயிரத்து 632 கஞ்சா செடிகளும், 4 கிலோ 847 கிராம் குஷ் போதைப்பொருளும், 25 கிலோ 483 கிராம் ஹசீஸ் போதைப்பொருளும், 41 ஆயிரத்து 874 மாத்திரைகளும், 36 கிலோ 176 கிராம் மாவா உள்ளிட்ட போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 313 பேரைப் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## சுதந்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்றன.

10 அடி ஆழம் வரை அகழ்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

குறித்த பகுதியில் எதுவும் கிடைக்கப் பெறாத நிலையில் அந்தப் பகுதியில் அருகாமையில் அகழ்ந்து பார்ப்பதற்கு அனுமதி வழங்குமாறு உரிய தரப்பினர் கோரிய நிலையில் பிறிதொரு நாளுக்கு அனுமதிக்கு கோருமாறு நீதிபதி கூறியிருந்ததுடன், குறித்த அகழ்வு இடம்பெற்ற பகுதியை மூடுமாறு நீதிபதி உத்தரவு வழங்கியதை அடுத்து மூடப்பட்டது.

தற்போது அகழ்வு இடம்பெற்ற பகுதியில் 2021 ஆம் ஆண்டு அகழ்வு இடம்பெற்று எதுவும் கிடைக்காத நிலையில் மூடப்பட்டிருந்தது.

இருப்பினும் இதுவரை இடம்பெற்ற அகழ்வுப் பணிகளில் எவ்வித ஆயுதங்களோ, தங்கங்களோ மீட்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நடைபவனி கடந்த சில வருடங்களாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# வங்காள விரிகுடாவில் மீண்டும் புயல்

யாழ்ப்பாணம், நவ. 14

வங்காள விரிகுடாவில் தற்போது காணப்படும் காற்றழுத்த நிலைமைகள் காரணமாக மழை தொடரும் என்றும், எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் புயலுக்குச் சாத்தியம் காணப்படுகின்றது எனவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும் வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“கடந்த 8ஆம் திகதி சனிக்கிழமை எதிர்வுகூறியபடி வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி தற்போது இலங்கைக்குத் தென்கிழக்காக இலங்கைக்கு அருகில் காணப்படுகிறது. இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மழை எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடரும் வாய்ப்புள்ளது.

மீளவும் ஒரு காற்றுச் சுழற்சி எதிர்வரும் 17ஆம் திகதி வங்காள விரிகுடாவில் இலங்கைக்குத் தென்கிழக்கு திசையில் உருவாகும். அது கிழக்கு மாகாணத்துக்கு அருகாக நிலை கொள்ளும். இதனால், மீளவும் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதன்பின் எதிர்வரும் 21ஆம் திகதி இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே மாநிலத்துக்கு அருகாக காற்றுச் சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது. இது தீவிரம் பெற்று ஒரு புயலாக மாறும் வாய்ப்புள்ளது.

இந்தப் புயலால் எதிர்வரும் 22ஆம் திகதி வரை இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்கள் மிக கன மழையைப் பெறும் என்பதோடு கடற்பகுதிகள் மற்றும் கரையோரப் பகுதிகளில் பலத்த வேகத்தில் காற்று வீசக்கூடும். எனினும், இதனை எதிர்வரும் 18ஆம் திகதிக்குப் பின்னரே உறுதிப்படுத்த முடியும். இந்தப் புயலுக்குச் சென்யார் எனப் பெயரிடப்படும். இதனால், எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.” - என்றுள்ளது.

# கொட்டாஞ்சேனை துப்பாக்கி சூடு– மேலும் 2 பேர் கைது!

*கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தின் 16ஆவது ஒழுங்கையில் நடாத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியில் கடந்த 07ஆம் திகதி இரவு துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று பதிவாகியது.*

*கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தின் 16ஆவது ஒழுங்கையில் நடாத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.*

*குறித்த சம்பவத்துக்கு உதவிய குற்றச்சாட்டில் மேலும் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் கொழும்பு மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று (13) கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஆணும், மஹரகம பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.*

*கைதான ஆண் குற்றத்தைச் செய்ய துப்பாக்கிதாரி வந்த காரின் சாரதியாக இருந்தவர் என்றும், சந்தேகநபரான பெண், இந்தக் குற்றத்தைச் செய்ய சந்தேகநபர்களுக்குத் தங்குமிட வசதிகளை வழங்கியவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*கைதான சந்தேகநபர்களை கொழும்பு மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர், தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*சம்பவத்தில் கொல்லப்பட்டவர் குற்றக் கும்பல் உறுப்பினரான 'பூகுடு கண்ணா' என்ற பாலச்சந்திரன் புஷ்பராஜ் என்பவரின் உதவியாளர் என்பது விசாரணைகளின் போது தெரியவந் துள்ளது.*

# தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹல்லொலுவ நீதிமன்றில் சரண்!

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹல்லொலுவ இன்றையதினம் நீதிமன்றத்தில் சரணடைவதற்காக வருகை தந்துள்ளார்.

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளரான துசித ஹல்லொலுவவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் லஹிரு சில்வா நேற்றையதினம் (13) பிடியாணை பிறப்பித்திருந்தார்.

நாரஹேன்பிட்டி பகுதியில் தாம் பயணித்த வாகனம் மீது சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறி, போலியான முறைப்பாடு செய்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபராக துசித ஹல்லொலுவ பெயரிடப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு தொடர்பிலான விசாரணை நேற்றையதினம் நீதிமன்றுக்கு வந்தபோது, சந்தேக நபரான துசித ஹல்லொலுவ நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்க வில்லை.

இதையடுத்து, கொழும்பு மேலதிக நீதவான் லஹிரு சில்வா பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிள் செலுத்துனர் ஒருவரை விபத்துக்குள்ளாக்கிவிட்டு தப்பிச் சென்ற வாகனம்!

வரகாபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - கண்டி பிரதான வீதியில், 36ஆவது மலைக் கோவில் அருகில் மோட்டார் சைக்கிள் செலுத்துனர் ஒருவரை விபத்துக்குள்ளாக்கிவிட்டு வாகனம் ஒன்று தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் இன்று (14) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துனர் வீதியில் விழுந்து கிடப்பதை அவதானித்தவர்கள் வரகாபொல பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கினார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், காயமடைந்தவரை வரகாபொல வைத்தியசாலையில் அனுமதித்த நடவடிக்கை எடுத்த போதும் அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது. கணேமுல்லை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் வரகாபொல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வரகாபொல பொலிஸார் முன்னடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெதர்லாந்து நாட்டுப் பெண்ணின் பணப்பையைத் திருடிய சந்தேகநபர் கைது!

வெளிநாட்டு பெண் ஒருவரின் பணப்பையைத் திருடிய சந்தேகநபர் ஒருவர் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபல ஹோட்டல் ஒன்றின் அறையில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண் மற்றுமொரு பெண்ணுடன் குறித்த ஹோட்டலின் விசேட விருந்தினர் அறையில் தங்கியிருந்துள்ளனர்.

குறித்த வெளிநாட்டுப் பெண்கள் அறையில் இல்லாத நேரத்தில் ஒருவரின் பணப்பையை சந்தேகநபர் ஒருவர் திருடியுள்ளார்.

இது தொடர்பில் கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்ணின் பணப்பையில் இருந்த திராம் (ஹுசையஅ) மற்றும் யூரோ (நுரசழ) பணம் (இலங்கை மதிப்பில் ரூபா 330,000) காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் விரைந்து செயல்பட்டு சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், வெளிநாட்டுப் பெண்கள் அறையில் இல்லாத நேரத்தில் இந்தத் திருட்டைச் செய்துள்ளதாகவும், திருடப்பட்ட வெளிநாட்டுப் பணத்தை ஜ-எல பிரதேசத்தில் உள்ள நிதி நிறுவனமொன்றில் மாற்றி உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இன்று (14) கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கோட்டைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூடு: ஆணும், பெண்ணும் சிக்கினார்கள்!

கொழும்பு, நவ. 14

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் அண்மையில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பில், பெண் ஒருவரும், இளைஞர் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதலின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு -13 ஐச் சேர்ந்த 27 வயது இளைஞரும், மகரகம பகுதியைச் சேர்ந்த 32 வயது பெண்ணுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிதாரிகளுக்கு வாகனத்தைச் செலுத்தியமை மற்றும் தங்குவதற்கு இடம் வழங்கியமை தொடர்பான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களைத் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய, கொழும்புக் குற்றத் தடுப்புப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2025 வெளியிடப்பெற்றது.